JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 55/2024 | Crime No. | 114/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-2-மாதேஷ்வரன்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது வரதநல்லூரில் குடியிருந்து கொண்டு, தோட்ட வேலை செய்து வருகிறேன். சாட்சி தேவி எனது தங்கையாவார். ஆஜர் எதிரி ராஜேந்திரன் எனது மச்சாண்டார் ஆவார். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு மாலை நேரத்தில் ராஜேந்திரன் நாங்கள் குத்தகைக்கு ஓட்டும் தோட்டத்தில் புல்லை அள்ளிப் போட்டுவிட்டார். மீண்டும் நாங்கள் அங்கிருந்து அள்ளி ராஜேந்திரனின் இடத்தில் போட்டோம். அதற்கு ராஜேந்திரன் தேவியை பிடித்து கருக்கருவாளல் தேவியின் இடது பக்கம் முழங்கையில் அடித்தார். அதனால் தேவிக்கு இடது முழங்கையில் காயமானது. என்னிடம் காட்டப்படும் கருக்கருவாளல் ராஜேந்திரன், தேவியை இடது முழங்கையில் அடித்த அரிவாள் இது இல்லை. அந்த அருவாள் வேறு மாதிரி இருந்தது. பின்னர் தேவியை ஒரு போக்கு வண்டியின் மூலம் பவானி அரசு மருத்துவமனைக்கு கூட்டிச் சென்றார்கள். பின்னர் நான் எனது தோட்டத்திற்கு சென்று விட்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

தேவி எனது நெருங்கிய உறவினர் என்றால், சரிதான். தேவி காட்டில் இருந்த புல்லை எடுத்து ராஜேந்திரன் காட்டில் போட்டார்கள் என்றால், சரிதான். தேவிக்கும், ராஜேந்திரன் என்பவருக்கும் காடு தொடர்பான பிரச்சனை இருந்து வருகிறது என்றால், சரிதான். ராஜேந்திரன் காடு முன்பு உள்ளது, தேவி காடு பின்பு உள்ளது என்றால், சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால், சரியல்ல. தேவியை,

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:58:38 +0530

எதிரி அடித்தார் என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கிற்கு சாட்சியாக தேவி தான் என்னை அழைத்தார் என்றால், சரிதான். எனது முகவரி விவரங்கள் அனைத்தும் தேவி தான் போலீசாரிடம் கொடுத்தார் என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:58:49 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 55/2024 | Crime No. | 114/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-3-தனசேகர்** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சன்னியாசிபாளையத்தில் குடியிருந்து கொண்டு, பேரேஜ் அருகே இரும்பு கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதிய நேரத்தில் போலீசார் மேப் போட்டு கொண்டு வந்ததாகவும், பவானி காவல் நிலையத்திற்கு நான் சென்றிருந்தபோது கையெழுத்து மட்டும் கேட்டார்கள். போட்டுக் கொடுத்தேன். என்னுடன் பூங்கொடி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையெழுத்தை போலீசார் மேப் போட்டதற்காக கேட்டார்கள். அதற்காக தான் போட்டுக் கொடுத்தேன். **கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க நடந்து விவரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 24.02. 2024 ஆம் தேதி வரதநல்லூரை சேர்ந்த நீலாமணி என்பவரை பார்க்க வேண்டி மதியம் நீலாமணி வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்தபோது பவானி காவல் உதவி ஆய்வாளர் அங்கு வந்து என்னிடமும், பூங்கொடி என்பவரிடமும் கடந்த 21.02.2014 ஆம் தேதி மதியம் 03:30 மணிக்கு நீலாமணி காட்டை குத்தகைக்கு எடுப்பதில் அருகில் உள்ள தேவி என்பவருக்கும், அவரது உறவினர் ராஜேந்திரன்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:58:57 +0530

என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு ராஜேந்திரன், தேவியை கெட்ட வார்த்தையில் திட்டி கருங்கல்லால் அடித்ததாகவும், அது சம்பந்தமாக தேவி பவானி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும், அது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும், அதற்காக சம்பவயிடத்தை பார்வையிட இருப்பதாகவும், சாட்சியாக இருக்க எங்களை கேட்டுக் கொண்டார் என்றும் நாங்கள் இருவரும் சம்மதித்தோம் என்றும் பின்னர் மதியம் 02.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டார் என்றும் அதற்கு சாட்சியாக நானும், பூங்கொடி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் மதியம் 02:30 மணிக்கு போலீசார் கருக்கருவாள் ஒன்றை சம்பவயிடத்தில் இருந்து எடுத்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும் அதற்கு நானும், பூங்கொடியும், சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தபோது பூங்கொடியும், காவல் நிலையத்திற்கு வந்து கையொப்பம் செய்தார் என்றால், எனக்கு முன்பே காவல் நிலையத்தில் பூங்கொடி கையொப்பம் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:59:03 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-4 Witness
for Prosecution

| CC.No. | 55/2024 | Crime No. | 114/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-4-பூங்கொடி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 25th day of February 2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் வரதநல்லூர் செல்லியம்மன் கோவில் அருகில் குடியிருந்து கொண்டு, ரோட்டு வேலைக்கு சென்று வருகிறேன். கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு ஒரு நாள் மதியான மதியம் நேரத்தில் எங்கள் ஊரில் உள்ள ரோட்டில் நான் சென்றபோது போலீசார் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் எதற்காக என்று கேட்டேன். போலீசார் கையெழுத்து மட்டும் போடுமாறு சொன்னார்கள் போட்டு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை பகுதியிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடைய தான். அந்த கையொப்பம் மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

கடந்த 24.02. 2024 ஆம் தேதி வரதநல்லூரை சேர்ந்த நீலாமணி என்பவரை பார்க்க வேண்டி மதியம் நீலாமணி வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்தபோது பவானி காவல் உதவி ஆய்வாளர் அங்கு வந்து என்னிடமும், பூங்கொடி என்பவரிடமும் கடந்த 21.02.2014 ஆம் தேதி மதியம் 03:30 மணிக்கு நீலாமணி காட்டை குத்தகைக்கு எடுப்பதில் அருகில் உள்ள தேவி என்பவருக்கும், அவரது உறவினர் ராஜேந்திரன் என்பவருக்கும் பிரச்சனை ஏற்பட்டு ராஜேந்திரன், தேவியை கெட்ட வார்த்தையில் திட்டி கருங்கல்லால் அடித்ததாகவும், அது சம்பந்தமாக தேவி பவானி காவல்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.02.25 06:59:09 +0530

நிலையத்தில் புகார் கொடுத்திருப்பதாகவும், அது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும், அதற்காக சம்பவயிடத்தை பார்வையிட இருப்பதாகவும், சாட்சியாக இருக்க எங்களை கேட்டுக் கொண்டார் என்றும் நாங்கள் இருவரும் சம்மதித்தோம் என்றும் பின்னர் மதியம் 02.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து எழுதிக் கொண்டார் என்றும் அதற்கு சாட்சியாக நானும், பூங்கொடி என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் மதியம் 02:30 மணிக்கு போலீசார் கருக்கருவாள் ஒன்றை சம்பவயிடத்தில் இருந்து எடுத்து கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும் அதற்கு நானும், தனசேகர் என்பவரும், சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.25 06:59:18 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani